மறுபரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்யுமாறு தங்களிடம் நான் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) ஆளுநர் மீது அவை உரிமைமீறல் அறிவிப்பு கொடுத்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் உரையின்பொழுது நான் அவை விதிமீறல் கொடுத்திருக்கிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை ஒரு நிமிடத்தில் கூறுகிறேன். நேற்றைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பேரவைக்கு வரும்பொழுது, காவல் துறை அணிவகுப்பு மரியாதையோடு பூங்கொத்து கொடுத்து, அதிகாரிகள் படைசூழ மரியாதையுடன் அழைத்துவந்து கண்ணியமாக அவரை உட்கார வைத்தீர்கள். ஆனால், மேதகு ஆளுநர் உரையாற்றும்பொழுது, ஆளுநர் உரையில் இல்லாதவற்றைத் தமிழில் பேசியும், பிறகு தேசியகீதத்திற்கு முன்பு அவர் அவையிலிருந்து வெளியேறியதையும் அவை அறியும். ஆனால், நீங்கள் கண்ணியத்தோடு பேசி, அதற்குப் பிறகு நீங்கள் பேசியதையும், அவர் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட்டீர்கள். நீக்கப்பட்ட பிறகு, உடனே ஒரு மணி நேரத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய X தளத்தில் அவையில் என்ன நடந்தது என்பதை வீடியோவாக பதிவிட்டிருக்கிறார். ஆகவே, நான் சொல்வதெல்லாம், அவர் 2021, செப்டம்பர் 21-ல் பதவியேற்றதிலிருந்தே, பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆட்சிக்குத் தொடர்ந்து எதிராகவும், தமிழ்நாட்டு மக்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, X தளத்தில் பதிவிட்டிருப்பதை என்னுடைய கவனத்திற்கு உரிமை மீறலாகத் தந்திருக்கிறீர்கள். அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. உட்காருங்கள்.